உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருசு] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஞு ஐப்பசி மீ உஅஉ (1947 நவம்பர் 14 வெள்ளிக்கிழமை) [ இல கூo

## பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

பிறையூரும் சடைமுடியெம் பெருமா னூர்
பெரும்பற்றப் புலியூரும் பேரா வூரும்
நறையூரும் நல்லூரும் நல்லாற் றூரும்
நாலூரும் சேற்றூரும் நாரை யூரும்
உறையூரும் ஓத்தூரும் ஊற்றத் தூரும்
அளப்பூர் ஓமாம்புலியூர் ஒற்றியூரும்
துறையூரும் துவையூரும் தோழூர் தானும்
துடையூரும் தொழஇடர்கள் தொடரா அன்றே

—அப்பர் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

## இன்னோர் ஹிட்லர்

### ஜெர்மனியில் தோற்றலாம்

சென்ற திங்கட்கிழமை கொழும்புக்கு வந்த கப்பலில், அவுஸ்திரேலியாவிற் பிரசுரமாகும் "ஸிட்னி மோர்னிங் ஹெரல்ட்" பத்திரிகைப் பிரதிநிதியான ஸ்ரீ ஹியூ லெமிர் என்பவரும் ஒருவர். இவர் பலகாலம் ஜெர்மனியில் இருந்தவர். ஜெர்மனி கடந்த யுத்தத்தில் தோற்றபின், என்ன நிலைமையில் இருக்கிறது என்பதை ஓர் பத்திரிகை நிருபர்க்குப் பின்வருமாறு அவர் தெரிவித்தார்:

"இந்த இரண்டாவது யுத்தத்தில் ஜெர்மனியர் முற்றாக முறியடிக்கப்பட்டுவிட்டார்கள். இதுபற்றி அவர்களுக்குச் சந்தேகமேயில்லை. இன்று ஜெர்மனியர் இனி என்செய்வது என்ற ஏக்கத்துடன், வருவது வரட்டும் என்ற மனப்பான்மையுடன் இருக்கிறார்கள். ஆனால் நாம் ஓர் விஷயத்தை மறக்கவோ, மறுக்கவோ முடியாது. ஆச்சரியப்படத்தக்க விதத்தில், ஜெர்மனியர் தங்கள் வாழ்க்கையைப் புனருத்தாரணம் செய்யக்கூடிய வல்லுனர். ஆகவே, இன்னோர் ஹிட்லர் உதயமாகி, ஜெர்மன் மக்களுக்குத் தலைமைதாங்கி அவர்களை வழிநடத்த முன்வந்தால் நாம் அதிசயமுற வேண்டியதில்லை. ஹிட்லர் தோன்றுவதற்குமுன், எந்த உற்பாதங்கள் ஜெர்மனியில் இருந்தனவோ, அதே உற்பாதங்கள் இன்று அங்கே இருப்பதை உலக இராஜதந்திரிகள் கூர்ந்து நோக்கல் அவசியம்."

## அடுத்த ஆண்டில் அதிக சீனி

அடுத்த ஆண்டுடன், இப்போதிலும் பார்க்க அதிக சீனி ஊரவர்க்கு விநியோகிக்கப்படத்தக்க ஏதுக்கள் காணப்படுகின்றன என்று உணவுப் பகுதி அதிகாரி ஸ்ரீ கே. ஆள்வாப்பிள்ளை அவர்கள் கொழும்பு 'டைம்ஸ்' பத்திரிகை நிருபர்க்குக் கூறியுள்ளார்.

இப்போது வெங்காயத்துக்கு மிகவும் தட்டுப்பாடாகியிருக்கிறது. எகிப்தில் பேநோய் நடப்பதால், அந்த நாட்டு வெங்காயம் இங்கே இறக்குமதியாவது தடுக்கப்பட்டிருக்கிறது. வெங்காய ஏற்றுமதி மீது, இந்திய அரசாங்கம் தடைவிதித்திருப்பதும், வெங்காயத் தட்டுப்பாட்டுக்கு ஓர் பிரதான காரணமாகும். ஆனால் ஆண்டும் இரண்டுமாத காலத்துக்கிடையில் அந்தத் தடையுத்தரவை இந்திய அரசாங்கம் நீக்கிவிடுமென்று தாம் நம்புவதாக ஸ்ரீ ஆள்வாப்பிள்ளை கூறினார். அப்படியாகத் தடையுத்தரவு நீங்குமானால் வெங்காயம் இங்கே அபரிமிதமாக இறக்குமதியாகும்.

# வெள்ளையர் ஆதிக்கம்

## இருக்கத்தான் வேண்டுமாம்!

உலகத்தை ஆளப் பிறந்தவர்கள் வெள்ளையர்கள், மற்றவர்கள் யாவரும் அந்த வெள்ளையர்க் கடிமைகளாக வாழவே ஆண்டவனாற் சிருஷ்டி செய்யப்பட்டவர்கள் என்ற கொள்கையுடையவர் தென் ஆபிரிக்கப் பிரதமர் சேனாதிபதி ஸ்மட்ஸ்.

தென்னாபிரிக்கா, கேப்டவுன் நகரத்தில் நிகழ்ந்த ஓர் கூட்டத்தில், சேனாபதி ஸ்மட்ஸ், தென் ஆபிரிக்காவில் எல்லார்க்கும் சமத்துவம் கொடுக்கவேண்டும் என்று கிளர்ச்சி செய்பவர்கள் வெறும் முட்டாள்கள் என்றும், அது ஓர்போதும் நடக்கமுடியாத காரியம் என்றும் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"இங்கே, ஓர் சில விஷமிகளைவிட ஏனைய நீகிரோவர்கள் சமத்துவத்தை விரும்பவேயில்லை, வெள்ளையர்தான் சர்வாதிகாரம் நடாத்த, தாம் அவர்களுக்குக் கீழ் இருந்து வாழ்வதை இந்த நீகிரோவரிற் பெரும்பாலார் விரும்புகிறார்கள். அவர்களுக்குச் சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் என்னும் சுலோகங்கள் தேவையில்லை வெள்ளையர் நீதிமுறையுடன் பரிபாலித்தால் போதுமானது என்று அவர்கள் கருதுகிறார்கள்."

தென்னாபிரிக்காவிலே, இந்தியர் பிரச்சினை சம்பந்தமாக சேனாதிபதி ஸ்மட்ஸ் பின்வருமாறு கூறினார்.

"நாம் இந்திய மக்களை நடாத்தும் முறைபற்றி ஐக்கியதேச ஸ்தாபனத்திற் பெரும் முறையீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால நாங்கள்தான் இங்கே என்ன செய்கிறோம். ஒருவரோடொருவர் கலந்து அந்நியோந்நியமாகச் சீவிக்க முடியாத சாதியாரை [illegible] அதனைத்தான் நாங்கள் இங்கே செய்துவருகிறோம். இதனை இந்தியா ஏதோ பாரதூரமாக மதித்து ஐ. தே. ஸ்தாபனத்தில் முறைப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தியாவில் இன்று நிகழ்வது என்ன? அங்கே அவர்கள் என்னமுறையில் அப்புறப்படுத்துகிறார்கள் என்பதை உலகம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, நாங்கள் இங்கே செய்யும் கருமங்களை, இந்தியாவில் நிகழும் செயல்களுடன் ஒத்துப்பார்க்கப் போனால், நாங்கள் எவ்வளவு தாராள மனப்பான்மையுடன் கருமம் ஆற்றுகிறோம் என்பது தெரியும்."

# கலையும் கோவிலும்

## தமிழரது ஒப்புயர்வற்ற நாகரிகம்

[ கோவைகிழார் ]

தமிழர்கள் எப்போதும் சமயப்பற்று மிகுந்தவர்கள், சமய ஆராய்ச்சியில் மிகவும் வல்லவர்கள், தாங்கள் எண்ணின எண்ணங்களை நூல்களில் எழுதி வைத்ததுமட்டு மன்றி, உருவங்களிலும் செய்து வைத்தார்கள். அழகு என்ற ஒரு பண்பு இருந்தால், அந்த அழகைச் செய்யுள்களால் விரித்துக் கதைகளால் விளக்கி வைத்தார்கள். அவைகளோடு நிற்கவில்லை. அழகுள்ள உடல், அழகுள்ள விலங்கு, அழகுள்ள அணி, அழகுள்ள மலை, அழகுள்ள சிற்பம், அழகுள்ள ஓவியம் இவைகளைத் தங்கள் அருமையான கை வேலையினாலும், சிறந்த மூளையினாலும் இயற்றினார்கள். இவைகளைச் சேமித்து வைப்பதற்காக நிலயங்களையும் ஏற்படுத்தினார்கள். அவ்வித வியப்புப் பொருந்திய நிலயமே கோயிலாகும். அதிலே சமயம்மட்டுமன்று, எல்லா விதமான கலைகளும் நிரம்பியுள்ளன. அவ்விதக் கோயில்களின் வளர்ச்சி தமிழர்களால் ஏற்பட்டது. தமிழின் பெருமை வளரவளரக் கோயிலின் அற்புத அமைப்புகளும் பெருகின.

இன்னும் சிறிது விளக்குகின்றேன். கேளுங்கள் மிகவும் பக்குவமடைந்தவர்கள் அல்லாமல் சாதாரணமாக உள்ள மக்கள் தங்கள் நெஞ்சைக் கட்டுப்படுத்துவது எளிதன்று; சமய வழிபாட்டில் அது மிகவும் கடினம், ஆகவே வழிபடக்கூடிய பொருளை ஓர் உருவமாக்கினார்கள். போற்றுவதற்கு அவ்வுருவத்தை ஓரிடத்தில் வைத்தார்கள். அவ்விடத்தை அழகுபடுத்தினார்கள். அவ்விடமே கோயில் ஆயிற்று. முதலில் ஓர் அழகிய மரத்தின்கீழ் ஒரு கடவுள் உருவத்தை வைத்துத் தொழுதார்கள். பிறகு மரத்தைச்சுற்றி ஒரு காவணம் கட்டினார்கள். காவணம் முதலில் ஓலையால் வேயப்பட்டது. பிறகு ஓட்டினால் ஆக்கப்பட்டது. பல்லவ அரசர்கள் தோன்றியபோது அந்நிலையங்களுக்கு உறுதிதரவே கருங்கல்லில் குடைந்து குடை கோயில் ஆக்கினார்கள். ஒரே கல்லில் தேர்போலச் செய்தார்கள். அக்காலச் சிற்பிகளுடைய வேலை மிக அருமையானது. மாமலையில் போய்ப் பாருங்கள். திருச்சியில் போய்க் கண்ணால் அவ்விருந்தை அருந்துங்கள். பிறகு வெட்டின கற்களைக்கொண்டு மண்டபங்களும் விமானங்களும் உண்டாக்கினார்கள்; சோழர்களே அந்தக் கலையை மிகுந்த உயர் நிலைக்குக் கொண்டுவந்தார்கள். உலகமே வியக்கும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலை உண்டாக்கினார்கள். கற்றூண்களில் சிறந்த உருவப்பாடுகளை உண்டாக்கினார்கள்; சுவர்களில் எவரும் எக்காலத்தும் போற்றக்கூடிய ஓவியங்களை சிறந்த அழியாத வர்ணங்களில் தீட்டினார்கள். சிற்றன்னவாசல் தஞ்சை திருவுள்நாழி இவைகளைக்கண்டு மகிழுங்கள். நம்முடைய பெருமையை நாமே அறிவதில்லை.

வடநாட்டிலே கோயில்கள் இல்லையா? தமிழர்கள்மட்டும் ஒப்புயர்வில்லாத கோயில்களைக் கட்டினார்களா? என்று நீங்கள் கேட்கலாம். வடநாட்டில் கோயில்கள் உண்டு, ஆனால் அவற்றின் சிறப்புத் தென்னாட்டைக்கண்டால் மங்கிப்போகும். சிற்ப நூல்களிலும் தென்னாட்டுக் கோயில்களைத் தனியே திராவிட முறை என்று இதனைப் பிரித்துக் கூறுவதற்கு என்ன காரணம், அறிவீரா? வட நாட்டு ஆதரவு இன்றித் தமிழ் அறிவியல் தனியே பெருகித் தமிழர்கள் தனித்தே கோயில் பண்புகளைத் தனித்த முறையில் வளர்த்து வந்ததனால் அப்பாகுபாடு வந்தது. இன்றைக்கே திரு மயிலைக் கோயிலைப் போய்ப் பாருங்கள். முருகனுடைய விமானம் திராவிட முறையென்றும் விநாயகருடைய விமானம் நாகரம், அதாவது ஆரிய முறை என்றும் அறிவீர்கள். இந்த வேறுபாடு அந்தக் கடவுள் வழிபாடு தோன்றின இடத்தை நோக்கி வந்ததென்க. முருகன் தமிழ்க் கடவுள்; ஆகவே, அவன் கோயிலும் தமிழ் முறைக் கோயிலே; தெரிந்தோ தெரியாமலோ ஆகமங்களிலும் இம்முறை போற்றப் பட்டுவிட்டது. ஆகவே தமிழர்களுடைய கலை வளர்ச்சி வளர வளர கோயில்களின் வளர்ச்சியும் வளர்ந்ததென அறிவீர்கள்.

இனி, இதுபோலவே கோயில்களும் தமிழைவளர்த்து வந்தன என அறிய வேண்டும். தமிழ் என்றால் ஏடுகளில் உள்ள எழுத்தும், பொருளும் மட்டும் அன்று, ஓவியம் சிற்பம், ஆடல் பாடல், வழிபாடு, வாழ்க்கை முதலிய எல்லாப் பண்புகளும் அடங்கியதே ஆகும். இவைகளின் வளர்ச்சி எல்லாவற்றிற்கும் நமது கோயில்களே வளர்ச்சி இடங்கள் என அறிக. தமிழ் நூல்களிலே இலக்கணப் பகுதிகள் ஐந்து என்பர். எழுத்து சொல், பொருள், யாப்பு, அணி என்பவை இவைகளை அறிய ஏடுகள்தான் உண்டு என நினைக்கவேண்டா, ஏடுகள் இவைகளின் வரலாற்றைக் காட்டுவதில்லை. ஆனால் கோயில்கள் காட்டும் என அறியலாம். கோயிலில் உள்ள

தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ஞு
ஐப்பசி உஅ உ வெள்ளிக்கிழமை


## கந்தசஷ்டி காலத்திற் கந்தவேளை வணங்குக

I

வந்த வேளை எரித்த மலர்க்கணன்
தந்த வேளைத் தயித்தியர் காலனை
எந்த வேளையும் என்னுளம் நீங்கலாக்
கந்த வேளைக் கருத்துள் இருத்துவாம்

இற்றைத் தினமாகிய வெள்ளிககிழமை, ஐப்பசிமாசக் கடைசிவெள்ளியாக விருத்தலினலும், கந்தசஷ்டி ஆறுநாள்களுள் ஒருநாளாய் நிகழ்தலாலும் கந்தக் கடவுளுக்குரிய இரு விரதங்களை அன்பர்கள் அநுட்டிக்கும் புண்ணிய தினமாகும்; இப்படியான புண்ணிய தினங்களிலே கலியுக வரதராகிய கந்தசுவாமியார் சுரக்கும் திருவருள் அன்பர்களிடத்தில் விசேஷமாக வந்து கூடுமென்று பெரியோர் பகர்வர்.

செயற்கருந் தவஞ் செய்து, பரமசிவனிடம் பராக்கிரமத்தையும் அதிகாரத்தையும் வரமாகப் பெற்று ஆயிரத்தெட் டண்டங்களை நாற்றெட்டு யுகங்களாக ஆண்டுவந்தவனுகிய சூரபன்மன் இந்திரன் முதலாந் தேவர்கட்கு இடுக்கண் விளைத்தமையினல், அத்தேவர்களைக் காத்தருளும் வண்ணம் சிவாஞ்ஞைப்படி சுப்பிரமணியப் பெருமான், இந்த ஐப்பசிமாசச் சுக்கிலபக்கப் பிரதமை தொடக்கம் சஷ்டியீருகவுள்ள ஆறுநாளும் அச்சூரபன்மனுடன் யுத்தஞ் செய்தலாகிய திருவிளையாடலைச் செய்து சஷ்டிதிதியாகிய ஆறுநாள் அவனையாட்கொண்டருளின ரெனவும், இதுவே கந்தசஷ்டி விரத காலமெனவும், முருகக் கடவுளைக் குறித்து இக் கந்தசஷ்டி விரதத்தை நோற்போர் பலவகையான நல்ல பேறுகளை யடைவரெனவும், கந்தபுராணம் முதலியன உறுதியாகக் கூறும். இக் கந்தசஷ்டி காலத்திலே இங்குள்ள சைவ மக்களுட் பெரும்பாலார் இவ்விரதத்தை விதிப்படி யநுட்டித்து, இவ்வேளையில் திருக் கோயில்களிலே பத்தியோடு படித்துப் பயன் சொல்லப்படும் கந்தபுராணம் சூரபன்மன் வதைப்படலம், திருச்செந்தூர்ப்புராணம், மயூரகிரி புராணம்முதலாம் சுப்பிரமணியபரத்துவத்தை யெடுத்துக் கூறும் புராணங்களைச் சிரத்தையோடும் கேட்டுப் பயனடைகிருர்கள். ஆனல் இங்ஙனஞ் செய்யும் அன்பர்களின் தொகை இப்பொழுது தேய்ந்து வருகிறது. இந் நிகழ்ச்சியின் ஞாபகார்த்தமாகவே ஐப்பசிமாசச் சுக்கிலபக்கச் சஷ்டிதோறும் திருக்கோயில்களிற் சூரன்போர்த் திருவிழா ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றது.

இனி, சஷ்டி காலத்தில் நிகழ்ந்த இச் சூரசம்மார வரலாற்றிற்கு, பேரறிஞர்கள் தத்துவார்த்தமெனப்படும ஞானப் பொருளுஞ் சொல்லுவர்; சூரன், சிங்கன், தாரகன் என்னும் மூவரும் முறையே ஆணவம் மாயை காமியங்க ளெனப்படும் மும்மலங்களென்றும், தேவர்களிடத்தில் நீடித்தகாலந் தடித்திருந்த இம் மூவகை மலங்களையும் முருகவேள் அறவே யகற்றி அவர்கட்கு அருள்செய்தா ரென்றுங் கூறுவர்; இத் தத்துவக் கருத்தைக் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளும் தேவர்கள்போற்று படலத்திற் குறிப்பாகப் பின்வருமாறு கூறியருளினர்:—

'சார்தடிந்து துய்க்குங் கனைகடலின்
நீர்வறப்பப்
போர்தடிந்து செல்லும் புகர்வேல்
தனைவிடுத்துச்
சூர்தடிந்தா யன்றே, தொழுமடியேம்
வல்வினையின்
வேர்தடிந்தாய்; மற்றெமக்கு வேறோர்
துறையுண்டோ"

"சுவாமீ, தேவரீர் ஞானசத்தியாகிய வலிய வேற்படையைச் செலுத்தி அழிவு செய்தது அச்சூரபன்மன் முதலிய அசுரர்களையல்ல, அவ் வேற்படையைக் கொண்டு, எங்களை நீடித்தகாலம் பந்தித்துள்ள பல வகையான மலங்களாகிய பாவங்களை யெல்லாம் நிர்மூலமாக்கி யருளினீர்; ஆனமையினல் இனி, எங்களுக்கு எவ்வகையான பாசத் தொடர்பு மில்லையாகும்" என்று சண்முகத் தெய்வத்தை அரிபிரமேந்திராதி தேவர்கள் வழுத்தினர்களாம். மேலும், சூரன், சிங்கன், தாரகன் என்னும் மூவரும் முறையே, இராசத சாத்வீக தாமத குணங்களென்னும், அம் மூக் குணங்களையும் முருகவேள் கெடுத்தன ரென்றும் பொருள் சொல்வர்.

புராண திலகமாய் விளங்கும் கந்தபுராணத்திற்கு அறிஞர்கள் தங்கள் அறிவிற்கும் முருகவேள்மீது வைத்த பத்திமைக்குந் தகப் பொருள் காண்டல் முடியும்; எங்ஙனமாயினும் இந்தப் புண்ணிய காலத்திலே அன்புற்றவராக, அன்பற்றவராக எவரேனும்முருகவேளுடைய சந்நிதியையடைவரேல் அந்தப்பெருமானே தன் முன்னிலையில் வருவோரை மாற்சார சம்பந்தமாக, அதாவதுதாய்ப்பூனை தன் குட்டிகளைக் கௌவி யெடுத்தல்போல, வலிந்து அருள்புரிவரென்பதாம். இதனை நல்லறிவென்பது இம்மியத்தனையு மில்லாத் தமியேன் சொல்லுகிறே னென அன்பர்கள் எண்ணிக்கொள்ள வொண்ணது; அந்தக் கந்தரனுபூதிமானுகிய கச்சியப்ப சிவாசாரிய சுவ மிகளே உள்ளமுருகும்வண்ணம் சொல்லியருளி யுள்ளார்.

### தேகவியோகம்

### ஸ்ரீமதி நாகரத்தின அம்மாள்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிற் பலவருடங்களாக ஆசிரியராக விருந்து, பின்னர் மதுரையிலுள்ள நீதிஸ்தலங்களில்வழக்கறிஞராக கடமையாற்றிய காலஞ்சென்றதிரு.J.K. நமசிவாயம்பிள்ளையவர்களின் பத்தினியாரும், பண்டிதை பத்மாசனி,பாணந்துறை நீதித்தலத்தில் நீதிபதியாகக் கடமையாற்றிவரும் திரு. சிவஞானசுந்தர மென்னு மிருவருக்கும் தாயாரும், டக்டர்S இராஜேந்திரமவர்களின் மாமியாருமாகிய புலோலி, ஸ்ரீமதிநாகரத்தினஅம்மாள் தம்மைச் சிலநாட் பிடித்திருந்த [illegible]

# முருகன் தமிழ்த் தெய்வம்

## கண்டியில் திரு. மீனுட்சிசுந்தரம்பிள்ளை சொற்பொழிவு

6-11.47 மாலை 6 மணிக்கு கண்டி, மத்தியமாகாண சைவ மகாசபை மண்டபத்தில், சபையின் உபதலைவர்களுள் ஒருவராகிய திரு. பொ பாலசிங்கம் அவர்கள் தலைமையில், அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. T. P. மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் "திருமுருகாற்றுப்படை" என்னும் பெருள்பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது

கண்டி நகரிலுள்ள சைவமக்கள், ஆணும் பெண்ணும் பிள்ளைகளுமாக மண்டபம் நிறையக்கூடி யிருந்தார்கள்.

விரிவுரையாளர், நக்கீரதேவரின் கடவுட் பக்தியைப்பற்றியும், அவரின் பரந்த அறிவைப் பற்றியும், கடவுளிடத்தும் உண்மையை உள்ளபடிகூறிய ஆற்றலைப் பற்றியுங் கூறிப்பின் நூலின்கண்ணே அவர் எடுத்தாண்ட சொறசிறப்புக்களையும் இயற்கை வருணனைகளையும், ஆறுபடை வீடுகளையும், அவற்றைப்பற்றிக் கூறுங்கால் புலவன் இயற்கையோடு முரணுகாது மக்கள் வாழ்ந்த நிலையையும், அவர்கள் தெய்வ வழிபாட்டின் ஆர்வத்தையும் பற்றி மிகவும் இனிமையாகச் சிறுவரும் விளங்குமாறு எடுத்துக் கூறினர்.

பழமுதிர் சோலையினின்று மருவியானது பாய்ந்து கீழேவருங்கால் யானைத் தந்தங்களையும், முத்துக்களையும், இரத்தினங்களையும், தேனினல் சிதையப்பாயும் தேன்பெருக்கையும், பலாப்பழச் சுளைகளையும், வாழைப் பழங்களையும் இருகரைகளிலும் சிடக்கா டுவது,கடவுள் வேண்டியார் வேண்டியாங் கீயும் வள்ளல் என்பதைக் காட்டுமெனவும், இவற்றை விரும்பாது மேலும் செல்லும் பக்குவான்மாவுக்குத் தன்னையே பரிசிலாக ஈய்ந்து பேரின்பமளிப்ப னெனவும், முருகன் தமிழ்த்தெய்வம் என்பதை முருகு என்னும் சொல்லைப்பல பொருள்களில் வைத்து விளக்கியும் என்றரை மணித்தியாலங்களாகப் பேசினர்.

பின், கண்டி வித்தியாபகுதித் தலைவர் திரு S. K. இராசசிங்கம் அவர்கள் சொற்பொழிவாளரின் பரந்த ஆராய்ச்சித் திறனையும், இலககியநூல்களில் அவர்கொண்ட பேரார்வத்தையும் பற்றிக் கூறி, ஒருகால் பழைய புலவர்கள் வீணே கடினபதங்களை வைத்து நூல்கள் யாத்தனர் எனத் தாம் எண்ணியதாகவும், இன்று பிள்ளையவர்களின் விரிவுரையின்பின் சங்க நூல்களிலே கையாளப்பட்டசொற்கள் தெய்வத்தன்மை வாய்ந்தனவாகக் கண்டதாகவும் கூறினர்கள்.

நன்றியுரை கூறுமுகத்தால், சபையின் இணைக் காரியதரிசிகளுள் ஒருவராகிய திரு. A. K. வேலுப்பிள்ளை அவர்கள்,ஆறுமுகநாவலர் வளர்த்த செந்தமிழ்நாறு மீழநடுநாட்டிலுள்ள சைவ நன்மக்களின் முயற்சியால் இச்சபை இற்றைக்கு இருபத்திரண்டு வருடங்களுக்குமுன் தொடங்கி இன்றுகாறும் சைவத்திற்கும் தமிழிற்கும் ஆற்றிவரும் தொண்டைப் பற்றியும், இத் தொண்டில், சுவாமி விபுலானந்தர், திருவாளாகள் கா, சுப்பிரமணியபிள்ளை, கலியாணசுந்தர முதலியார் முதலிய பெரியோர்கள் காலத்துக்குக் காலம் பங்குபற்றினர்கள் எனவும், இன்றும் அண்ணுமலைப் பல்கலைக் கழகம் தனது தொண்டன் ஒருவனைப் பணியாற்றச் செய்தமைக்குச் சபையார் மேற்படி கழகத்திற்கு மிகவும் கடமைப்பட்டிருக்கின்றர்கள் எனவுங் கூறிப் பின் பிள்ளையவர்களை இலங்கைக்கு வரவழைப்பித்தும், இச்சபையாரின் வேண்டுகோளுக்கிணங்கிக் கண்டியிலும் ஓர்சொற்பொழிவையாற்ற உதவி செய்த கொழும்புத் தமிழ்க் கழகத்திற்கும், அதன தலைவராகிய திரு அருணந்தி யவர்களுக்கும் நன்றியறிதல் கூறினர்.

ஈற்றில் பேராசிரியர் இச் சபையின்கட் கொண்ட கேண்மை நாடோறும் வளர வேண்டுமெனவும் கூறித் தாம் இயற்றிய சில பாடல்களையும் வாசித்துக் காட்டினர்கள்.

சந்தனம் வெற்றிலை பாக்கு முதலியன வழங்கப்பட்டபின் தேவார பாராயணத்தோடு விரிவுரை நிறைவேறியது.

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—38)

[சென்றவாரம் (7-11-47) வெளிவந்த உலகம்பலவிதக் கதையின் கடைசி வரிகளில் "இங்ஙனமாக நமசிவாயமும் தன் உத்தியோகத்தானத்திலிருந்து மீண்டு அங்கே வந்தான்" என இருப்பதை, சிவகுருநாதனும் எனத் திருத்திக்கொள்க]

"எந்நேரமும் இதுவே சிந்தனை"

வந்த சிவகுருநாதன் சந்நியாசியொருவர் தங்கள் வாசஸ்தானத்தில் வந்திருப்பதைக் கண்டு ஆநந்தங் கொண்டு நேரே அவர் முன்னிலையிற் சென்று பயபக்தியோடு பணிந்து ஒருபுறத்தே விநயமாக நிற்க, அச் சந்நியாசி "விசுவநாதா,விசாலாட்சி" என்று உச்சரித்து அவனுக்கு விபூதி வழங்க, அவன் அதைத் தன் இரு கரங்களாலும் ஏற்றுச் சிவசிவஎன்று சொல்லிக் கிழக்குமுகமாக நின்று பூசிக்கொண்டு மீட்டும் அச்சந்நியாசியாரை வணங்கினன்; "அப்பனே, உனக்குப் பசிபல்லவா, போய்ப் போசனம் முடித்துக்கொண்டு வரலாம், நான் உன்னையும் பார்த்துக்கொண்டு போகவேண்டுமென்ற நோக்கத்தினலேயே இதுவரை இங்கே இருக்கிறேன்" என்று சந்நியாசி சொல்லுதலும், "சுவாமீ, தாங்கள் இங்கே போசனஞ் செய்தால் நாங்கள் புண்ணியராவேம்" என்று தன் கைகளைப் பிசைந்துகொண்டு பணிவுடன் கேட்க, "இல்லை, அப்பனே, நான் ஆகாரம் முடித்தபிறகுதான் உங்களிடம் வந்தேன்; உண்பது ஒருவேளை உணவுதான்; மேலும் சற்றுமுந்தி உன் தாயாரும் சகோதரியும் தாகசாந்தியின் பொருட்டுப் பால் தந்தார்கள், உட்கொண்டேன்; நீ போய் ஆகாரஞ் செய்துவா" என்று சொல்லிவிட்டுச் சிவபாக்கியத்தைப் பார்த்து 'உங்கள் அண்ணனை அழைத்துககொண்டுபோய் ஆகாரம்பரிமாறு அம்மா" என்றர்; சிவபாக்கியம் தமயனுக்கு உணவு பரிமாறும்படி அடுக்களைப்பக்கம்போக, சிவகுருநாதனும் அவரிடம் அநுமதிபெற்றுக்கொண்டு போசனஞ் செய்யச் சென்றன்; அப்பொழுது அத்துறவியின் அயலே

தொடர்ச்சி 5 ம் பக்கம்

ணமாக, கொழும்பு ஸ்ரேஷன் தெரு வீதியிலுள்ள தமது வாசஸ்தானத்தில்,சென்றதிங்கட்கிழமை 10-11-47 பிற்பகல், தமது மக்கள் மருகர் உற்றார் சுற்றத்தார் கவலையுற இவ்வுலக வாழ்வை யொருவினர்; இவருடைய ஈமக்கடன்கள் அடுத்தநாள் புதல்வராகிய திரு. சிவஞானசுந்தரமவர்களாற் பல சுற்றமித்திரர் சமுகத்தில் விதிப்படி செய்யப்பெற்றன. இவருக்கு இறக்கும்போது வயசு 72 வரையிலிருக்கும்; இவர் புலோலியில் ஆண்களும் பெண்களும் அக்காலந்தொட்டுக் கல்வியுடையவராய் விளங்குந் தூயமரபிற் பிறந்தவர்; தமிழ் ஆங்கிலம் சம்ஸ்கிருதம் என்னும் மூன்று மொழிகளும நன்கு பயின்றுள்ளவர்; புலோலி. பருவதவர்த்தனி சமேதராகிய பசுபதீசுவரரை அநுதினமும் வழிபடும் நியதிபூண்டவர். இல்லறத்திற்குரிய நலன்களெல்லாம் பொருந்தியவர்; இவ்வுத்தமியின் ஆன்மா சாந்தியடைவதாக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

ஒதுக்கத்தோடு நின்ற கண்ணகியம்மை மீட்டும் அவரை வணங்கி, "சுவாமி, உங்களைப்போன்ற பெரியோர்கள் வாயிலாகத்தான் உண்மைகளைக் கேட்டறியலாம்; எங்கள் குடும்பத்திலே சிலகாலமாகத் தீராக் கவலையொன்று நேர்ந்துவிட்டது; வேறொன்றுமல்ல, சாமி, எங்கள், சொந்த மருமகன், இந்த நாட்டில் முந்தியே வந்து உத்தியோகம் பார்த்துக்கொண்டிருந்தவர்; பொல்லாத யப்பானியர் சண்டைசெய்து இந்த இராச்சயத்தைக் கைப்பற்றி அநியாயஞ் செய்தார்களாம்; அந்தக்காலந் தொடக்கம எங்கள் அருமை மருமகனைப்பற்றி ஏதும் அறிந்து கொள்ள முடியவில்லை அவருக்குக் கல்யாணஞ் செய்து கொடுப்பதெனச் சின்னவயசிலேயே நிச்சயஞ்செய்து வைக்கப்பெற்றவள்தான சாமி, இந்த மகள்; இவளெனிலோ, "இல்வாழ்க்கையில் வாழ்வதானல் தன் மைத்துனனுக்கு "இல்லக்கிழத்தியாய்வாழ்வேன்; இல்லையேல் ஆப்படியே நித்தியகன்னிகையாகவிருந்துசாவேன்" என்று பிடிவாதமாக நிற்கிறுள்: இவள் சொல்வதும பிழையென்று நான் சொல்லவில்லை, சாமி, ஆனல் எந்தநேரமும் இதுவே சிந்தனையாயிருந்து கலங்குகிறுள்; இவள் இப்படிக் கலங்கும்போது,பெற்றதாயாகிய நான் உற்ற தமயனுகிய என்மகன எல்லோருமே கலங்கவேண்டித்தானேயிருக்கிறது சாமி; இந்த ஒன்றுந்தான், சாமி, ஆண்டவன் எங்களுக்கு விட்ட குறை; வேறு ஒருவகையான குறைவுமில்லை எங்கள் அருமை மருகன் உயிரோடு இருக்கிறரோ இல்லையோ என்பதுஞ் சந்தேகமாயிருக்கிறது, சாமி...." என்று முறையிட்டு கண்களில் நீர் தாரையாக வடிய நின்ருள்.

### "ஆண்டவன் செய்யுஞ் சோதனை, ஊச்"

கண்ணகியம்மையின் முறையீட்டைக் கேட்ட சங்கியாசி அவளைப் பரிவுடன் பார்த்து "ஆச்சி, நீர் கவலைப்படவேண்டாம்; எது நடக்கவேண்டுமென்ற நியதியுண்டோ அது நடந்தேதீரும்; ஆனல் நடப்பதெதுவென்பதை நாமறியோம்; மேலும், நான் முக்காலமு முணர்ந்த ஞானியுமல்லேன், ஆருடஞ் சோதிடமென்னுமிவைகளை யறிந்தவனுமல்லேன், அந்த இறைவனிடத்திலே பெரியோர்கள் ஞானிகள் பாராட்டும் பத்திமையில் இலட்சத்திலொரு கூறுதானும் என்னிடத்திலில்லை; அவனை வணங்கவேண்டுமென்ற ஒரு ஆசை மாத்திரம் என்னிடத்திலுண்டென்று சொல்லலாம்' இவை கிடக்க, உங்கள மருமகனுக்கு ஏதும் ஆபத்து நேர்ந்திருக்குமெனறு எண்ண என் மனம் இடந்தரவில்லை; உங்கள் குடும்பம்புண்ணியஞ்செய்தகுடும்பம்போல் எனக்குப் புலப்படுகின்றது; கடவுட்பத்தி அடியார் வணக்கம் முதலாம் நல்ல செயல்களுங் குணங்களும் உங்களிடத்திற் காணப்படுகின்றன; ஆதலால் உங்களுக்கு ஒரு ஆபத்தும நேராது, இவையெல்லாம் ஆண்டவன் செய்யுஞ்சோதனை யாச்சி, காலகதியில் எல்லாம் நன்மையாய் முடியும" என்று சொல்லிவிட்டு, அச்சங்கியாசியார் பின்னரும் கண்ணகியம்மையைப்பார்த்து "ஆச்சி,கேட்கிறேனென்று குறையெண்ணுதீர்கள், உங்கள் பெயர் கண்ணகியமமையா? ஓம் சாமி," உங்கள் மகன் பெயர் சிவகுருநாதனு? ஓம், சாமி; மகள்பெயர் சிவபாக்கியமா? "ஓம், சாமி, இவைகளையெல்லாம் சொல்லாமலேயறிந்தீர்கள், எங்கள் மருமகனைப் பற்றியுஞ் சொல்லமுடியுஞ் சாமி; உடையது விளம்பேல் என்றபடி பெரியோர்கள் தங்கள் உள்ளக்கிடக்கையை, தங்கள் பெருமையைப் பிறருக்கு இலேசில் வெளியிடமாட்டார்கள், சாமி, நீங்களும் அப்படித்தானிருக்கிறீர்கள்" என்று ஆவலோடு சொல்லிக் கேட்டாள் கண்ணகியம்மை; இப்படிக் கண்ணகியம்மை சொல்லிக்கொண்டு நிற்கஞ் சமயத்திலே, சிவகுருநாதன் போசனம் முடித்துக்கொண்டு அங்கேவர, சிவபாக்கியமும் தமயன் பிறகே அங்கு வந்து நின்ருள்; ஆகாரமாய்விட்டதாஎன்று சாமி சிவகுருநாதனைக்கேட்க, அவன் "ஆம், சாமி" என்று சொன்னபின், அத்துறவி கண்ணகியம்மையை மீளவும் நோக்கி "ஆச்சி, இந்த வரலாறுகளையெல்லாம் நான் சொல்லாமலறிந்தேனல்லேன்; பிறர் சொல்லவே அறிந்தேன், அதுவோக,கோலாலம்பூரிலே உங்களுக்குச் சொந்தமான பாக்கியலட்சுமி யென்றொரு பெண்ணும், அப்பெண்ணின் கணவன் விஜயரத்தின மென்றொருவரும இருக்கிறார்களா?" என வினவ, "ஓம், சாமி, இருக்கிறார்கள்" என்று மூவரும் ஆச்சரியத்தோடு விடை சொன்னர்கள்; "அவர்களைப் பார்த்துக்கொண்டு வருகிறீர்களா, சாமி" என்று ஆவலுடன் வினவினள் கண்ணகியம்மை; "ஆம், ஆச்சி, நான் யாத்திரைக்குப் புறப்படும்போதும் அவர்களைப் பார்த்துக்கொண்டுதான் புறப்பட்டேன்; அந்தப் பாக்கியலட்சுமி படிப்பிக்கும் பள்ளிக்கூடத்திலேதான், ஆச்சி, நானும் சமயபாடம் படிப்பிக்கும் உபாத்தியாயராகக் கடமையார்க்கிறேன்; உங்களுடைய இந்த மகளுக்கும் அந்த மகளுக்கும் எந்த விஷயத்திலும் அதிக பேதத்தைக் காணேன்; தனக்குத்தாய் நீங்கள்தாமெனவும், உங்கள் மக்களிருவரும் தனக்குச் சகோதரர்களெனவும் அந்த மகள் எனக்குச் சொன்னள்; உங்கள் வரலாறு முழுவதையும் சொல்லி நீங்கள் கவலைப்படுதற்கு ஏதுவாகவுள்ள செய்தியையும் எடுத்துக்கூறி, உங்கள் மருமகனுடைய நாமத்தையுஞ் சொல்லி, எங்கேனும் அவரைச் சந்தித்தால் உடனே அழைத்துக்கொண்டு வரும்படியும் என்னிடம் அந்த அம்மாள் சொல்லி யிருக்கிறுள்: நீங்கள் உங்கள் மருமகனையிட்டு எவ்வளவு கவலைப்படுகிறீர்களோ, அவ்வளவு கவலை அவளும் தன் தமக்கையையும் இட்டு அந்தப் பாக்கியலட்சுமியிடத்திலுமுண்டு, ஆச்சி" என்று சொல்லுதலும், கண்ணகியம்மை கண்கலங்கினள், சிவகுருநாதன் முகம் வாடியது; சிவபாக்கியத்தின் கண்களிலிருந்து நீர் சிந்தியது: சுவாமி, நான் பெறுவிட்டாலும் பாக்கியலட்சுமி என் அருமையான மகள்தான்: உடன் பிறவாவிட்டாலும் என்னுடைய இந்தப் பிள்ளைகளிருவருக்கும் அவள் அன்பான தங்கைதான்; அவளுக்கு வாய்த்த கணவனும் அருமையான குணமுடையவர்" என்ருள் கண்ணகியம்மை: "அந்தவூரிலேயிருந்தாலும் எங்கள் தங்கைச்சக்கு எந்த நேரமும் இந்தவூரிலிருக்கும் எங்களைப்பற்றிய சிந்தனைதான்" என்ருள் சிவபாக்கியம்; "அதிலுஞ் சந்தேகமா? தங்கைச்சி" என்ருன் சிவகுருநாதன்.

### "இங்கேதானே தங்குதல் வேண்டும்"

அதன்பின்னர் அந்தச் சந்நியாசியார் யப்பானிய யுத்தம் நடந்தபோது, ஒரு சிறுபெண் தன் பெற்றுரைப் பிரிந்து தனித்தவளாய்த் தம்மிடத்தில் அடைக்கலம்புகுந்த வரலாற்றையும், அப் பெண்பிள்ளையைத் தாம் தம் மகளாகப் பாவித்துப் பாதுகாத்து வருதலையும், காசியாத்திரை புறப்பட்டு வரும்போது, அந்த மகளைப் பாக்கியலட்சுமியுடைய பாதுகாப்பில் ஒப்புவித்து வந்ததையும் விபரமாக எடுத்து அவர்களுக்குச் சொல்ல, அவர்கள் மூவரும் உள்ளமுருகினர்கள். சிவகுருநாதன் அத்துறவியை வணங்கி, [illegible] நீங்கள் [illegible] தம போகவேண்டாம; இன்றிரவு இங்கேதானே தங்குதல்வேண்டும்" என்று பக்தியுடன் கேட்க, அப்படிச் செய்யலாமென்றுர் சுவாமியார்' அவர்களிருவரும் மாலைக்காலமாதலும் சந்தியாகாலத்திற் செய்யவேண்டிய கடன்களைச் செய்து முடித்துக்கொண்டு சமீபத்திலுள்ள திருக்கோயிலுக்குச் சென்று, அங்கு எழுந்தருளிய தெய்வத்தைக் கும்பிட்டபின் மீண்டு தம வாசஸ்தானத்தையடைந்தனர்; சற்றுநேரஞ் செல்லுதலும் சிவகுருநாதன் சாமியாரைப்பணிந்து "சுவாமி, ஒருவேளை யுணவொழிய உண்பதில்லை யென்றீர்கள்; இப்பொழுது சொற்ப பால்பழம் உண்ணவேண்ணுமா?" என்று கேட்க,'பால் பழமெனில் உட்கொள்ளலாம்" என்றுர் சாமியார்: சிவகுருநாதன் சுவாமியாரைப் போசனஞ்செய்தற்காகிய இடத்திற்கு அழைத்துக் கொண்டு போய் இருக்கச்செய்து தானும் உடனிருப்ப, சிவபாக்கியம் உணவுக்குரிய பண்டங்களை ஒரு பாத்திரத்தில் இட்டபடி எடுத்துக்கொண்டு அங்கேவர, கண்ணகியம்மை பசுப்பால் கொண்டு பின்னே வந்தாள்; அப்பொழுது அந்தச் சந்நியாசியார் கண்ணகியம்மையைப் பார்த்து "ஆச்சி, உங்கள் மகளைச் சிரமப்படுத்த வேண்டாம்; நீங்களே ஆகாரம் பரிமாறலாம்" என்று குறிப்பாகச்சொல்ல, சிவபாக்கியம் தான் கொண்டுவந்த உணவுப் பாத்திரத்தை அங்கேதானே மெல்ல வைத்துவிட்டு, அந்த இடத்தைவிட்டகன்ருள்; இருவருக்கும் உண்கலத்தையிட்டுக் கண்ணகியம்மையே சந்நியாசியாருக்குப் பழவர்க்கமும் பாலும் தம்மகனுக்குப் பணிகாரம்பழம் என்னுமிவைகளும் பரிமாறினுள் துறவியாகிய தாம் கன்னிகைபரிமாற உணவேற்றருந்தவொண்ணுதென்ற காரணத்தினுற்றுன், அச் சந்நியாசியார் சிவபாக்கியத்தைப் புறக்கணித்துக் குறிப்பாற்கூறினர் போலுமென, தாயும் மகனும் அபிர்த்தனர்; அந்த இடத்தைவிட்டு அடுத்த அறையிற் [illegible] சிவபாக்கியம், தங்கள் தாயார் கைம்மைபிராயிருந்தாலும் தமக்கு உணவுபரிமாறச் சம்மதித்தசாமியார், தன்னைக் கன்னிகையென்ற காரணம்பற்றியல்லவாபுறக்கணித்தாரென்றெண்ணிக் கவலைகூர்ந்தாள்; அதனைச்சாமியாரும்விளங்கிக்கொண்டார்;

### "சந்தேகமொன்றுண்டு கேட்கலாமா?"

இருவரும் போசனம் முடித்துக்கொண்டு தலைவாசற்பக்கம் வர்திருப்ப, தாயும் மகளும் ஆகாரஞ் செய்தபின் அங்கே வந்தார்கள்;காசியாத்திரையின் மகத்துவத்தைப் பற்றிச் சாமியார் சொல்ல, அந்த மூவரும் பயபக்தியோடு கேட்டுக்கொண்டிருந்தனர்; அதன் பின்னர்ச் சிவகுருநாதன் தான் படுத்துறங்கும் அறையிலே அந்தச் சாமியாரும் உறங்குதற்காகிய படுக்கை யை ஆயத்தஞ் செய்தான்: இருவரும தத்தமக்கென இடப்பட்ட படுக்கையிற் படுத்தனர்: ஆனல் உறங்கிலர்; கண்ணகியம்மையும மகளும் தாம்படுக்கும் அறையிற் போய்ப் படுத்தனர்; சிவபாக்கியத்திற்கு அன்றிரவு உறக்கம் வந்திலது; காரணம் வேறொன்றுமல்ல; அந்தச் சாமியார் தமக்கு அன்னம் பரியாறுது தன்னைப் புறக்கணித்தாரே யென்ற கவலைதான்; இங்ஙனமாக, சிவகுருநாதன், "சுவாமி, தங்களிடத்திற் கேட்டறியவேண்டிய சந்தேகமொன்றுண்டு. கேட்கலாமோ" எனலும், சுவாமியார் "சந்தேகமிருந்தாற் கேட்டறியவேண்டியது உன்கடன், அறிந்தவரையிற் சொல்லவேண்டியது என்போல்வார் கடன்" என்றுர்; சிவகுருநாதன் படுக்கைவிட்டெழுந்து அப்படுக்கையிற்றுனே யிருந்தபடி, "சுவாமி,அதிதிகள் யாரும் வீட்டிற்கு வந்தால், அவர்களுக்குக் கன்னியாயுள்ளார் அன்னம் பரிமாறலாகுமோ" என்று பணிவுடன் கேட்க, பரிமாறுதல் முறையல்லவென நினைக்கிறேன்" என்றுர் அந்தச் சந்நியாசியார்.

(வரும்)

## சைவபரிபாலனசபை ஆச்சிரமநிதி

### பணம் உதவியோர் விபரம்

| ஸ்ரீமான்கள்: | ரூ. ச. |
|---|---|
| முன்கணக்குப்படி | 2909 00 |
| T. செல்லப்பா | 10 00 |
| S. Y. சண்முகம் | 100 00 |
| S. சிற்றம்பலம் | 5 00 |
| R. சண்முகதாஸ் | 20 00 |
| K. நல்லதம்பி | 5 00 |
| K. சோமசுந்தரம் | 10 00 |
| K. A. வீரவாகு | 10 00 |
| S கந்தையா | 50 00 |
| S. விசுவலிங்கம் | 25 00 |
| C K சுவாமிநாதன் | 25 00 |
| Dr. S. வெற்றிவேலு | 50 00 |
| V. K. நாதன் | 25 00 |
| Dr S. சுப்பிரமணியம் | 250 00 |
| S. சண்முகம் | 25 00 |
| S தம்பிப்பிள்ளை | 25 00 |
| | 3544 00 |

தி. இராசநாயகம்
தனாதிகாரி

M 182—14.11.47   12.11.47


# கிருஷ்ணன் றாது

சருக்கவுரை

வில்லிபாரதம்—உத்தியோக பருவத்துள்ளதாகிய கிருஷ்ணன் றாது சருக்கம், பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய பொழிப்புரை சரித்திரத்தொடர்பு,நூலாசிரியர்வரலாறு என்னுமிவற்றுடன் யாழ்ப்பாணம் நாவலர் கலாசாலைத் தலைமையாசிரியர் வித்துவான் ந சுப்பையபிள்ளை யவர்கள் எழுதிய விசேடக் குறிப்புரையுஞ் சேர்த்து ஐந்தாம் பதிப்பாக அச்சிட்டு வெளிவந்துளது; இச்சருக்கத்திற்சிலபாகம் இப்பொழுதுதமிழ் ஆங்கில எஸ். எஸ். ஸீ பரீட்சைக்குப் பாடமாக விதிக்கப்பட்டுள்ளன

விலை 1 ரூபா 75 சதம் (ரூபா 1 அணு 12)

மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை

வண்ணர்பண்ணை :: யாழ்ப்பாணம்

20—10—47.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைவக் கிரியை விளக்கம்

இது சைவ நன்மக்கள் தாம் செய்யும் சமயக் கிரியைகளின் உட் கருத்தையும், நோக்கங்களையும் எடுத்து இலகுவில் விளக்கும் தமிழ் வசன நூலாகும், இதனை எழுதியவர்:

**ஆசிரியர், திரு. சு. சிவபாதசுந்தரம், (B.A.) அவர்கள்**

இதன் இரண்டாம் பதிப்பு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரின் வெளியீடாக வுள்ளது.

**விலை சதம் 50 (8 அணா)**

வண்ணார்பண்ணை 4-11-47

மனேஜர்
யாழ்ப்பாணம், சைவப்பிரகாசயந்திரசாலை

# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**
சி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48

# தந்தரோக சஞ்சீவி

## கந்தசாமி வைத்தியர் சந்தனாதித் தயிலம்

**ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2**

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வெந்நீரில் தோய்வது பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும், முரசுவளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் சும்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std 25 1.7-46—30.6.48. (வெ)

# இலங்கைவங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்.-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கிளேஸ வங்கி.
**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)
**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

Std 29 1-8—30-7-48

# மலேயாவுக்குக் கப்பல் பிரயாணம்

*யாழ்ப்பாணம்—சென்னபட்டணம—பினங்—சிங்கப்பூர்*

சென்னபட்டணம் மார்க்கம் பினங், சிங்கப்பூருக்கு மாதம் இருமுறையும் நேரே சிங்கப்பூருக்கு ஒருமுறையும் வசதிகளடங்கிய,

**கப்பல் பிரயாணச் சீட்டு**

எம்மூலம் 1947 நவம்பர் மாதம் தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்

**எஸ். ஆர். எஸ். நாதன்**
21/3, ஸ்ரான்லி ரேட் :: யாழ்ப்பாணம்

Std 22. 6-6-47—6 6-48

## மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

# கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச் செலவு எல்லாம் உட்பட, நாகபட்டணமிருந்து பினங் செல்ல டெக் ரிக்கற் ரூபா 130-க்கு எங்கள்மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

**வேறு செலவு உங்களுக்கு இல்லை**

பல நூற்றுக் கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ் செய்து திருப்தியடைந்துகொடுத்த நற்சாட்சிகள் அநேகமுண்டு.


**வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்**

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

**ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,**
252, காங்கேசன்துறை ரேட், :: சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம்
தந்தி (Srivel) :: .: பிராஞ்சு: நாகபட்டணம்.

3 2—9—47&28.2 48

# உங்கள் சங்கீதக் கருவிகள் பழுதடைந்துவிட்டனவா?



**அப்படியானல் உடனே எம்மிடம் கொண்டுவாருங்கள் 3 வருட உத்தரவாதத்துடன் புத்தம்புதிதாய் பழுதுபார்த்துத் தருகிறோம்**

[ எவ்வித நிலைமையில் உள்ளதாயினும் சரி கட்டணம் வெகு சகாயம் ]

கஸ்தூரிமோகன்புளூட் ஹார்மோனியக் கம்பெனி,
சிவலிங்கப்புளியடி, 484, K K. S. றேட், யாழ்ப்பாணம்.

Std 34 12—9—47 To 9—12—47 (F)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Friday. November 7. 1947

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org